3. கவன ஈர்ப்பு.

சென்னை உட்லண்ட்ஸ் ஓட்டல் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் குறித்து.

முற் பகல் 10-30 **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொதுமுக்கியமான காரியத்தைத் திரு. கா. வேழவேந்தன் அவர்கள் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

* * *

திரு. கா. வேழவேந்தன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் "சென்னை உட்லண்ட்ஸ் ஓட்டல் தொழிலாளரின் நீண்ட நாள் கோரிக்கைகளான உணவு, ஊதியம், சம்பள உயர்வு, சர்விஸ் தொகை போன்றவற்றைப் பெற முறையாக வேலை நிறுத்த நோட்டீஸ் தந்து, 8—7—71 முதல் அமைதியாக எல்லாத் தொழிலாளரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும்போது, சட்ட விரோதமாக உட்லண்ட்ஸ் நிர்வாகம் வெளி ஆட்களை மறைமுகமாக உள்ளே அழைத்துவந்து, ஓட்டலை நடத்த முயல்வதால், அதைத் தடுத்து நிறுத்த உட்லண்ட்ஸ் நிரந்தரத் தொழிலாளர் தலையிடும்போது ஏற்படும் குழப்பத்தையும், தீய விளைவுகளையும் சட்டம் ஒழுங்கு பற்றிய பிரச்சினைகளையும் பற்றி உடன் தலையிட்டு ஆவன செய்யவேண்டியது பற்றிய அவசரப்பொது முக்கியமான காரியத்தை" மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** பேரவைத் தலைவரவர்களே, சென்னை உட்லண்ட்ஸ் ஓட்டல் தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஊதிய உயர்வு, உணவுப்படி மற்றும் பல சலுகைகளுக்கான கோரிக்கைகள்மீது முறையான ஒரு வேலை நிறுத்தத்தில் 8—7—71 முதல் ஈடுபட்டனர்.

மேற்கூறிய தொழிற்தகராறில் முதற்படியான தொழிலாளர் துறை அலுவலர் 4-வது வட்டம், சென்னை முன்னிலையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. உடன்பாடு ஏற்படாததால் பின்னர் தொழிலாளர் துறை ஆணையரால் பேச்சு வார்த்தைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. திரு. கருணாகரன் மற்றும் நால்வருடைய வேலை இழப்பு பற்றி கோரிக்கை தொழிலாளர் நல ஆணையருடைய முன்னிலையில் தீர்த்து வைக்கப்பட்டது. ஏனைய கோரிக்கைகளின்மீது எந்தவிதமான தீர்வும் காண இயலாததால், தொழிலாளர்கள் 8—7—71 தேதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தொழிலாளர் துறை ஆணையர் முன்னிலையில் 13—7—71 அன்று நடந்த பேச்சு வார்த்தைகளில் சென்னை உட்லண்ட்ஸ் ஓட்டல் நிர்வாகத்தினர் தொழிலாளிகளுக்கு ரூ. 10 ஊதிய உயர்வும், விடுதியில் தங்குவோரிடமிருந்து வசூலிக்கும் 5 சதவிகித தொண்டுக் கட்டணத்தில் 80 சதவிகிதப் பங்கையும் தருவதற்குத் தயாராக இருந்தனர். மேற்படி சங்கத் தரப்பில் ரூ. 25 ஊதிய உயர்வும், தொண்டுக் கட்டணம் முழுவதும் தரப்படுவதுடன் எல்லா வேலையிழந்த தொழிலாளிகளையும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளிகளையும் திரும்பவும் நீ வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

1971 ஜூலை 28] [திரு. என். வி. நடராசன்]

இறுதியாக தொழிலாளர் நல அமைச்சர் என்ற முறையில் **அரசின் சார்பில்** கீழ்க்கண்டவாறு என் பரிந்துரையைக் கூறினேன் :

(அ) ரூ. 50-ம் அதற்குக் குறைவாக ஊதியம் வாங்கும் தொழிலாளிகளுக்கு ரூ. 15 ஊதிய உயர்வும்,

(இ) ரூ. 50 முதல் ரூ. 75 வரை ஊதியம் வாங்கும் தொழிலாளிகளுக்கு ரூ. 13 ஊதிய உயர்வும்,

(உ) ரூ. 75-க்கு மேல் ஊதியம் பெறுவோருக்கு ரூ. 11 ஊதிய உயர்வும்,

(எ) தொண்டுக் கட்டணத்தில் 5 சதவிகிதத்தில் 80 சதவிகிதமும், மற்றும்

(ஒ) ஏற்கெனவே நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டுள்ள தொழிலாளிகளின் பிரச்சினைகள் தவிர ஏனைய தொழிலாளிகள் அனைவரையும் திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்பாடு 1—8—71 முதல் மூன்று ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும் என்றும் உடன்பாடு ஏற்பட்டு வேலை நிறுத்தம் முடிவுற்றது. தொழிலாளிகள் 17—7—71-ம் முதல் வேலைக்குத் திரும்பினர்.

* * *

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டி உரிமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டி உரிமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்ட முன் வடிவை தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் மேதகு ஆளுநர் அவர்கள் பரிந்துரைத்துள்ளார்கள் என்பதை அறிவிக்கிறேன்.

4. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

(அ) 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டி உரிமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ் நாடு 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டி உரிமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்ய நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இச் சட்டமுன்வடிவினை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.